நெய்தல்

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்-2018

ஆசிரியர் - முல்லைஅமுதன்

‘நெய்தல்’

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்-2018

நெய்தல் – 3

ஆசிரியர் – முல்லைஅமுதன்

வடிவமைப்பு – சி. பற்மராஜன்

படைப்புக்கள் & ஆலோசனைகளுக்கு:

R.Mahendran

34 Redriffe Road

Plaistow

London E13 0JX.

U K

மின்னஞ்சல்: Neythal34@gmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

ஆசிரியர் பக்கம்

வணக்கம்,

நெய்தல் மூன்றாவது இதழ் மொழிபெயர்ப்புக் கவிதைகளுடன் உங்கள் கரங்களில் தவழ்கிறது. கவிதைக்கான இதழாக வரவேண்டும் என்பதே நெய்தலின் கனவு.. தொடர்ந்து மரபுக் கவிதைகளுக்கான சிறப்பிதழாக வரும்.

மின்னஞ்சல் மூலமும், அச்சிலும் பலரைச் சென்றடைந்திருக்கிறது. தொடர்ந்து பயணிக்க நெய்தலுடன் இணைந்திருங்கள். கணினி அல்லது இணைய வாய்ப்புக்கள் கிடைக்காத கிராமங்களிலுள்ள படைப்புக்களையும், படைப்பாளர்களையும் இணைத்தபடியே நெய்தல் வாசகர்களைச் சென்றடையும்.

ஆரம்பத்தில் நாம் எழுத நினைத்த போதெல்லாம் சங்கடங்களை கவிதை உலகம் ஏற்படுத்திய காலங்களையும் நினைத்துப்பார்த்தபடி, இன்றைய படைப்புலகம் பல கவிஞர்களை உருவாக்கியுமுள்ளது என்பதையும் மகிழ்வோடு வரவேற்றபடி நெய்தலின் வரவும் இன்று நிகழ்ந்திருக்கிறது.
ஒரு கனவு நிஜமாகியிருக்கிறது. நெய்தலுக்கான தங்கள் பங்களிப்பை வழங்குவதன் ஊடாக அடுத்த இதழையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
தொடர்வோம்.
இவண்,

முல்லைஅமுதன்
03.06.2018

கவிஞர் அறிமுகம்

மலையாள கவிஞர் ஜி. சங்கர குறுப் : (1901 – 1978) கேரளாவின் காலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு பேராசிரியர். மலையாளக் கவிதைக்காக முதல் ஞானபீட விருது பெற்றவர். ‘திலகம்’ இதழின் ஆசிரியர். வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் கடமையாற்றி உள்ளார்.

இவரது முக்கிய படைப்புகள்

சூரியகாந்தி, வழிப்போக்கனின் பாட்டு,
இலக்கிய இன்பம், விஸ்வதரிசனம்,
புல்லாங்குழல், நினைவலைகள்,
கட்டுச்சோறு, இனிமை,
சாந்தம் ஒளி, இருட்டுக்கு முன்பு,
கட்டுரை மாலை, முத்தும் சிப்பியும்.

◇◆ அருணா.சுந்தரராஜன்
(வளரி ஆசிரியர்)

சீனக் கவிதைகள்

காற்று தணியும் போது,
நீரலைகளும் நீர்வளையங்களும்
அமைதி கொள்கின்றன.
மேகங்கள் அகலும்போது
நிலவு எழுகிறது.
நிலவொளிரும் மூடுபனிகள்
விஸ்தாரமானவை, எல்லையற்றவை.
அவற்றின் விளிம்புகளைக்
கண்ணால் காண முடியாது.
ஆறுகள், கடல்கள், வாய்க்கால்கள், குளங்கள் என
அத்தனையும்
ஒரே தருணத்தில்
குளிர்ந்து அமைதிகொண்டு
மௌனமாகலாம். இவ்விதமாய்
ஓடாத நீரின் இயல்பு
வெளித்தெரியக் கூடும்.

ஜி ஸி யுவான் ˜ஹவா ˜வான்
தமிழில் : யுவன் சந்திரசேகர்
(கபாடபுரம்.காம்-இதழ்-1)
அனுப்பியவர்
நன்றி -கே.என்.செந்தில்

ஒலியைப்பற்றி
பிறக்கும் போது
பத்தாயிரம் சங்கதிகள்
காதில் விழுகின்றன.
ஆனால் எப்போதும்
அதி உச்ச வானுலகம்
சலனமின்றி இருக்கிறது.
என்றாலும்,
எதுவுமே நிசப்தத்தில் தான்
ஆரம்பித்தாக வேண்டும் –
அது மறைவதும்
நிசப்தத்திலேயே.

-வெய் யிங்-வு

தமிழில் : யுவன் சந்திரசேகர்

(கபாடபுரம்.காம்-இதழ்-1)

அனுப்பியவர்

நன்றி -கே.என்.செந்தில்

ஆயிரத்து மூன்று வால்நட்சத்திரங்களின் டான் ஜுவான்....
எப்போதும் நாம்
முன்னேற்றமின்றி மேலும் போய்க் கொண்டிருப்போம்
கிரகத்திலிருந்து கிரகத்திற்கு
நெபுலாவிலிருந்து நெபுலாவிற்கு
ஆயிரத்து மூன்று வால்நட்சத்திரங்களின் டான் ஜுவான்
பூமியினால் சிறிதும் அசைவுறாமல்
புதிய விசைகளைத் தேடுகிறான்
பேய்களை குறித்து தீவிரமாக சிந்திக்கிறான்.
எத்தனை பிரபஞ்சங்கள் மறக்கப்பட்டிருக்கின்றன
பிறகு யார்தான் மாபெரும் மறதியாளர்கள்
இந்த அல்லது அந்த உலகின் பகுதியை
நம்மை மறக்க செய்ய யருக்குத்தான் தெரியும்
கிரிஸ்டோபர் கொலம்பஸ் எங்கிருக்கிறார்
ஒரு கண்டத்தை மறக்க காரணமாயிருந்தவருக்குத்தான்
நாம் நன்றி சொல்லவேண்டும்
இழக்க
உண்மையாகவே இழக்க
அதிர்ஷ்டசாலிக்கு வழியை ஏற்படுத்தி
வாழ்க்கையை இழந்து வெற்றியைக் கண்டடைய,

-Guillaume Apollinaire-

தமிழில் : எஸ்.சண்முகம்

நன்றி : இணையம்

வெண்டுல யாத்திரை.

தோண்டித் தோண்டி, மேலும் தோண்டி
எங்கோ சென்று கொண்டிருக்கிறேந்த
முடிவற்ற—
பாதாளப் பள்ளத்தாக்குகளில்—
எங்கோ—என் ஆழம் எனக்கே தெரியாது.
இவர்களெல்லாம் உற்று நோக்கியபடி—
என் முகத்திற்கொரு பூட்டுக்காக
தேடிக்கொண்டிருக்கிறார்கள்.
நாங்கள் அருகருகில்தான் தான் – ஆனால்
காந்தத் துண்டுகளல்ல..
ஒரு சிறு நெருப்பு முன் அமர்ந்து
மூக்கு மீது சரிந்த கண்ணாடியுடன்
மோதிரத்தில் ஒரு கல் புதைக்க
சிரமப்பட்டபடி அவர்.
அனல் நாவை மோதிரம் மீது மையப்படுத்த
சிறு குழாயால் ஊதியபடி,
கொழுந்து மோதிரம் மீது ஒரு சூரியனாக..
யார் விரலில் மோதிரம் பார்த்தாலும்
பொற்கொல்லன் கண்களில் படபடக்கும்
சூரியப் பறவையின் இறக்கை ஒலி
செவியில் மோதுகிறது.
சிரமம்.
பள்ளத்தாக்கில் விழுவது சிரமம்.
ஆழம் தெரியாத அழத்தில் இறங்குவது
விளிம்புகளற்ற நெருப்புக் கிணற்றை
தாண்டுவது சிரமத்திலும் சிரமம்.
ஒரு மாலைப் பொழுதில் கலப்பையை
நிற்கவைத்து

கோப்பையினின்று சொட்டிக்கொண்டிருக்கும்
அந்தி வேளை மங்கல் நீரைப் பருகும்
யாதய்யாவின்
உள்ளங்கைச் சமுத்திரக் கருவறை
ஆழங்களில் மூழ்கி மிதக்கும்
கற்பனைகளை ஏந்திக் கொள்வது சிரமம்.
எத்தனை ஆழங்களெனத் தெரிந்து கொள்ள,
எத்தனை உயரங்களெனப் புரிந்து கொள்ள
ஊகப் பறவையாய் மாற--
உயர்ந்து எகிறும் பறவை பூமண்டலம் மேல்
சஞ்சரிக்க-
இரு விழிகளின் இரு முனைகள்
போதாது
இத் தேகம் பூமியினின்று
கொஞ்சம் மண்ணை உருண்டைகளாக்கி
விதவிதமான பாத்திரங்களாய் வடிவமைத்து
நீராலோ நெருப்பாலோ உயிராலோ
நிரப்ப ஒரு பிறவி போதுமா?
மண்ணைத் தோண்டி குவியல் குவியலாய்
குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.
நான்கு தூறல் விழுந்ததும்
மண்ணினின்று ஒரு நறுமணம்
மொட்டு மொட்டாய் முளை விடுகிறது.
மண் முன் நான்
கை கட்டி நின்று மண்ணை கன்றுகளை
கன்றுகளினின்று எதிரொலிக்கும்
காவியச் சந்ததிகளை போற்றிப் பாடியபடி
எவர் பின்னல் எந்த மரம் வளர்கிறதோ?
எந்த மரம் பின்னால் நின்று
யார் குறி வைக்கிறார்களென
அத்தனையும் மனதுள் காட்சியாகும்.

ஒரு உருவகமாய் புதிராய் தெரிகிறது.
வீட்டு முன் நின்று
ஹார்மோனியப் பெட்டியில் இழைக்கும்
சிறுவனின் விரல்களினின்று
எட்டிப்பார்க்கும் இளம் காலை
பின் மாலைப் பொழுதுகளை
எங்கோ வயற்காடுகளையும் தாண்டி
மிதந்து வரும் ஒரு விண்ணப்பக் கூக்குரல்
அதன் அருகிலேயே அலை அலையாய்
பின்னிப் பிணைந்த சிறு முறுவல்களை
எட்டிப் பிடிப்பது சிரமமே.
பிடித்து மடித்து சட்டைப் பைக்குள்
அடக்கிக் கொள்வது
இன்னும் சிரமம்.
ஆழம் தெரியாத தோண்டல்களினின்று
பீறிட்டெழும் ஞாபகங்கள்
நினைவுகளுக்கிருக்கும் மகத்தான
கவித்திறனை
சமீபமாய்த்தான் நான்
இனம் கண்டுள்ளேன்.
நிகழ்காலம் ஒரு புதிர்..
சீவிக் கொண்டிருக்கும் பென்சில் முனை..
ஒரு சிறு கவிதை.
அதன் விரல்களின் ஆழங்களுள் புக
ஒரு யாத்திரை துவக்கம் கண்டது.
முன்னும் பின்னுமாய் ஊசலாடும்
ஒரு பெண்டுல யாத்திரை..

கே. சிவாரெட்டி

தமிழில்: சாந்தா தத்

நன்றி: 'மோகனா..ஓ மோகனா' நூலிலிருந்து

நான் அவனைப் பார்த்துக்கொண்டிருக்க..
அவன் வெளியே பார்த்துக்கொண்டிருந்தான்...
நகரும் உலகத்தை.
பண்டைய நீர்த் தாரைகள்..சாரல்களின்
மிச்சமாய்
சிறு குன்றுபோல் தென்படுகின்றான்
என்னை முளைவித்துக் கொண்டிருக்கும்
விதைப்பூமியாகி
மறுகணம் மாயமாகிவிட்ட சிறுவனே
நீ அநாதையென்றால்
இத் தேசம் அநாதை
நீ வறியவன் என்றால்
இத் தேசமும் வறியது.
அடேய் அப்பனே
என் காகிதங்கள் மீது நடந்து செல்வாயா?
உன் சமுத்திரங்களை என் பாடல்களாய்
கோத்தபடி..
இதயமெங்கும் எதிரொலிக்கும்
சிறிகாகுளம் கானங்களே
உன்காலடிகள்
என்னை சமுத்திரமாக்கி
என்னை பூமியாக்கி
என்னைப் பெரும் காடாக்கி..
மறைந்துவிட்ட சிறுவனே
நீ என் எழுத்தாகி
என் எழுத்தாகி..

கே.சிவாரெட்டி
தமிழில்: சாந்தாதத்
நன்றி: ‘மோகனா ஓ மோகனா‘ (தொகுப்பு)

கே.சிவாரெட்டி அவர்கள் தெலுங்குப்படைப்புலகில் பிரபல்யமானவர். இதுவரை இருபது நூல்களைப் படைத்துள்ளார். இவரின் ‘மோகனா ஓ மோகனா‘ எனும் கவிதை நூல் சாகித்திய அகாடமி விருதைப்பெற்றமை குறிப்பிடத்தது.இந் நூல் சாகித்திய அக்கடமிக்காக தமிழில் சாந்தாதத் அவர்களின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளது

வாக்குமூலம்

எழுதிக்கொள் இதனை
நான் ஓர் அராபியன்
எனது அட்டையின் இலக்கம் 50,000
எட்டுக் குழந்தைகள் உள்ளனர் எனக்கு
ஒன்பதாவது அடுத்த கோடையில்
கோபமா உனக்கு?

எழுதிக்கொள் இதனை
நான் ஓர் அராபியன்
தொழிலாளருடன்
கற்களை உடைக்கிறேன்
கற்பாறைகளைக் கசக்கிப் பிழிகிறேன்
எனது எட்டுக் குழந்தைகளுக்கும்
ரொட்டித் துண்டினைப்
பெறுவதற்காக ஆயினும்
கருணை கேட்டு நான் இரந்திட
மாட்டேன்
உன் அதிகாரத்தின்
ஆளுகையின் கீழ்
முழந்தாழ் இட்டு நான் பணிந்திட
மாட்டேன்
கோபமா உனக்கு?

எழுதிக்கொள் இதனை
நான் ஓர் அராபியன்
பேர்புகழ் அற்ற ஒருவனே நான்
மூர்க்க உலகில் நிலைபேறுடையவன்
யுகங்களுக்கப்பால்
காலத்துக்கப்பால்
எனது வேர்கள் ஆழச்செல்வன
உழவர் குலத்தின் எளிய மகன் நான்
வைக்கோல் குடிசையில் வாழ்பவன்
நான்
எனது தலைமுடி மிகவும் கறுப்பு
எனது கண்கள் மண் நிறமானவை
எனது அரபுத் தலைஅணி
ஆக்கிரமிப்பாளரின் கைகளைப்
பிறாண்டும்

அனைத்துக்கும் மேலே
தயவு செய்து இதனையும் எழுது
யாரையும் நான் வெறுப்பவன் அல்ல
யாரையும் கொள்ளை அடித்தவன்
அல்ல
ஆயினும்
பட்டினி வருத்தும் போதிலோ
என்னைக்
கொள்ளை அடித்தவன் தசையினைப்
புசிப்பேன்

கவனம்!
எனது பசியை அஞ்சிக்
கவனமாய் இருங்கள்!
எனது சினத்தை அஞ்சிக்
கவனமாயிருங்கள்!

பலஸ்தீனக் கவிஞர் மறைந்த
மஹ்மூத் தர்வேஷ்
தமிழில்: எம்.ஏ.நுஹ்மான்
நன்றி: பலஸ்தீனக்கவிதைகள்,
அஷ்ரப் சிஹாப்தீன்

பச்சையமான காலையில்
நானொரு நெஞ்சமாயிருக்க விழைகிறேன்
ஒரு நெஞ்சம்
நன்கு கனிந்த மாலையில்
நானொரு நைட்டிங்கேலாக இருக்கவே விழைகிறேன்.
ஒரு நைட்டிங்கேல்
(ஆன்மா நேசத்தின் வண்ணத்தை மாற்றியது)
கூரிய ஒளிவண்ணம் உயிர்த்த காலையில்
நான் நானாகவே இருத்தலுற விழைகிறேன்.
ஒரு நெஞ்சம்
மாலையின் அந்திமத்தில்
நான் எனதேயான குரலாயிருக்க விழைகிறேன்.
ஒரு நைட்டிங்கேல்
ஆன்மா
ஆரஞ்சின் அதிவண்ணமாய் மாறியது.
ஆன்மா
நேசத்தின் வண்ணத்தை மாற்றியது.

பெத்திகோ கார்சிகா லோகா

தமிழில் : எஸ்.சண்முகம்

நன்றி : துயிலின் இரு நிலங்கள்.



அம்மாவின் குரல்

மீண்டுமொருநாள்
என் முன்பாக, மரக்கிளையொன்றில்
பறவையொன்று வந்தமர்ந்து கொண்டது
தனது கூரிய அலகினால்
என் கன்னப்பொட்டில்
மெலிதாக கொத்தியது
அறிவேன்,
இறந்து போன என் அன்னையிடமிருந்து
செய்தியொன்றை சுமந்து வந்துள்ளது.
அம்மா,
நீயே என்னை ஆள்பவளாக இருக்கின்றாய்,
என்னுடன் நீ பேசுகின்றாய்.
என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்.
எழு,
எழுந்து நில்,
எழுந்து நிமிர்ந்து நில்,
நீ உரத்துச் சொல்கின்றாய்.
காற்றினூடு
உனது குரலைக் கேட்கின்றேன்
சூரியனது ஒளிக்கிரணங்களிலும்
பறவைகளின்
பாடும் ஒலியிலும்
உனது குரலை நான் உணர்கின்றேன்.
எனது
நாடித் துடிப்பினூடே
என்னோடு நீ வாழ்கின்றாய்.

மரிய தக்வாம் : நோர்வேஜிய மூலம்.
தமிழில் பானுபாரதி

தாய் விரலின் திணறல்

அலுவலகத்திலிருந்து
பழைய கோப்புக்களைத் திருத்தி
வைத்துக்கொண்டிருந்தேன் நான்.
எல்லாவற்றிலுமுண்டு
கையொப்புகள் எழுத்துகள்
ஷரூபப்படுத்தப்படுவதற்கு முன்புள்ள
லிபிகள் அது.
சிலது பதியவில்லை முழுவதுமாக.
சிலதில் யாரோ பலமாக
பிடித்ததின் வேதனைகள்.
சிலது போதுமோ என சந்தேகிக்கின்றன..
சிலது வெட்கப்படுகின்றன..
சிலது அவமானம் கொண்டு கோபம்
சிலது விறைத்துக்
கொண்டிருந்ததின் லட்சணமுண்டு
தாய்விரலின் திணறல்.
அவர் கையொப்பிலிருந்து
பெப்புறாளத்திலோ
சாவகாசத்திலோ
விரல் இழுத்தெடுத்ததுபோலே
அவரை இப்போது காலமும்
இழுத்தெடுத்திருக்கவேண்டும்.
அதுவழிக்கு தோட்டிலோ
கிணற்றின் அருகிலோ
உடுவேட்டியிலோ
அலக்கு கல்லிலோ சோற்றுருளையிலோ
அந்தனம் கழுவியது போலே
ஏது தண்ணீரிலோ
அவரைக் கழுவியது?

மலையாளம்: கல்பற்ற நாராயணன்

தமிழில்: என்.டி.ராஜகுமார்

நன்றி: சதங்கை(தை/மாசி 2002)

நினைவில் நிற்கும் நிமிடம்

பாடசாலை நாட்களில்
ஆசிரியர் வகுப்பு மாணவர்களிடம்
நண்பர்களைப்பற்றி
எழுதச் சொல்லி கொடுத்தார்
அவர்கள் நண்பர்களைப்பற்றி
மிக உயர்வாக எழுதிக்கொடுத்தார்கள்.
ஒவ்வொரு மாணவனும் அதனைப்
பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள்
பலவருடங்களின் பின்பு
மார்க் வியட்நாம் போரில் விழுந்தான்.
இறுதி சடங்கிற்காக தேவாலயத்தில்
எல்லாரும் கூடி அவனுக்கு
இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்
நண்பர்கள் நெகிழ வைத்தனர்
ஒன்றன் பின் ஒன்றாக சவப்பெட்டியை
கடந்து சென்றார்கள்
கடைசியாக மார்க்கின் ஆசிரியர்
இறுதி மரியாதை செலுத்தினர்.
சவப்பெட்டியை முன் பிராத்தனை
செய்யும் போது சவப்பெட்டியை சுமந்து
செல்லும் வீரர் ஓடி வந்து
நீங்கள் மார்கின் கணித
ஆசிரியரா என்று கேட்டார்
ஆம் என தலை அசைத்தார்.
.மார்க் உங்களைப்பற்றி
அடிக்கடி கூறுவான் என்றான்.
மார்க் வீழும்போது
அவன் பணப்பையில் இருந்தது
பல மடிப்புகளாக மடிக்கப்பட்ட
தேய்ந்து போய் இருந்தது
அந்த கடிதம் அதில் மாணவர்கள்
மாக்கைப்பற்றி பாடசாலைக்காலங்களில்
மார்க்கை பற்றி உயர்வாக எழுதப்பட்ட
வரிகள்
மார்க்கின் தாயார் ஆசிரியரின்
கரம் பற்றி உங்களுக்கு நாங்கள்
நன்றி கூறவேண்டும் என்றார்.
ஏல்லா மாணவர்களையும்
உயர்வாக மதிக்கின்ற பண்பு
நீங்கள் விதைத்ததையே
அறுவடை செய்கின்றீர்கள்
அற்புதமான வாய்ப்புக்களை
தவறவிடாதீர்கள்
எல்லோரும் இறப்பது நியம்
என்றே ஒரு நாள் தியாகத்தின் நிமிடம்
அனைவரையும் அணைக்க
காத்து இருக்கிறது
அன்பு மட்டுமே மனங்களில்
நியமாக பேசுகின்றது.
அன்பே அடுத்தவர்களிடம்
மனங்களில் பேசுகின்றது
நாட்கள் கடந்து மனங்களில்
வாழுகின்றது
நீங்கள் வீழும்போதும்
உங்களை தாங்கிப்பிடிக்கிறது.
கனத்த இதயங்கள் அமைதி கொள்கிறது

ஆங்கிலத்தில் இருந்து ஜேர்மன்
மொழியில் மாற்றப்பட்டு
தமிழில்

தமிழ் ஈழமுருகதாசன்

ஏழை நீக்ரோவன்

ஏழை நீக்ரோவே இதுதான் உன் விதி!
ஏழை நீக்ரோவே இதுதான் உன் விதி!
வியர்வையும் குருதியும் வழியும் முதுகில்
சுளீர் என துடிக்கத்துடிக்க சவுக்கடி!
வெள்ளையனுக்கு வெள்ளைத் தந்தம்
சுமந்து சுமந்துன் நாள்கள் நீளும்
ஏழை நீக்ரோவே இதுதான் உன் விதி!
ஏழை நீக்ரோவே இதுதான் உன் விதி!
பசியால் உனது பாலர் துடிக்கிறார்
ஏதும் குடிசையில் இருந்தால் தானே !
யாரும் குடிசையில் இருந்தால் தானே!
எஜமான் படுக்கையில் துயிலும்
உன் மனையாள் எவ்வாறு இருக்க முடியும்!
ஏழை நீக்ரோவே இதுதான் உன் விதி!
ஏழை நீக்ரோவே இதுதான் உன் விதி!
துயரம் போலக் கறுத்த நீக்ரோவே
துடிப்பதும் அழுவதும் தொழிலாய்ப் போச்சே!
ஆங்கிலம் மூலம்

David diop (senegal)
தமிழ் மூலம்
சோ.பத்மநாதன்
நன்றி: ஆபிரிக்ககவிதைகள்(சோ.பத்மநாதன்)
அனுப்பி உதவியவர்: கவிசாரல் சாரா

ஓராயிரம் துயரங்கள்

அழகற்றவள் நான் என்கிறாய் நீ
நான் வித்தியாசமானவள் என்கிறாய்
எரிதழல்போல் விழும் வார்த்தைகள்
ஒவ்வொன்றையும் நான் தாங்கிக் கொண்டேன்
அவை அத்தனையையும் என் தொண்டைக்குள்
திணித்தது வாழ்க்கை.

வாழ்வே! நான் மூச்சுத் திணறும்வரை நீ
வேதனைகளையே தீனியாக்கலாம்.
வாழ்க்கை என்பது நியாயமற்றது என அழுகின்றேனா?
பெட்டை நாயே! என உன்னை ஏசுவதற்கு என்னை மன்னி!
இது மிகவும் கடுமையானதுதான்.
வாழ்வின் இனிமைகளுக்கு நான் பாத்திரமல்ல
அன்பு எனக்குச் சொந்தமில்லை.

இறைவன் நல்லவன் என்கிறாய் நீ
இதில் எனக்குச் சந்தேகமே.
சிறைப்பட்ட மனிதரில் பரிசோதனை மேற்கொள்ளும்
அவன் வெண்ணிற ஆடை பூண்டதொரு
பித்துப் பிடித்த விஞ்ஞானிதான்.

நாம் அலறிக்கொண்டே பதறி ஓடும்போது
ஒருவேளை அவன் சிரிக்கின்றானோ.
ஒருவேளை, அவன் ‘ஓ! இது இப்படித்தான்’
எனத் தலையை அசைத்தவாறு,
‘கட்டுப்பாடினுள் உள்ள குழு’
‘பரிசோதனைக் குழு’
எனக் குறிப்புக்கள் எழுதுகின்றானோ

நாம் சத்தமின்றி அழும்போதும்,
மூலைகளுக்குள் ஒடுங்கும்போதும்,
நகங்களைக் கடிக்கும்போதும்
எம்மை அவதானிக்கின்றானோ?

துருப்பிடித்த கூண்டுகளில்
நாம் அழுகிக் கொண்டிருக்கையிலும்
எமது மூச்சுத்திணறும் அலறல்
நிலவறைகளிலிருந்து கேட்கும் போதும்
ஒருவேளை, தன் படுக்கை அறையில்
பட்டுப்போன்ற மேக மெத்தைகளின் கீழ்
அந்த விசர் பிடித்த விஞ்ஞானியான
இறைவன் எம்மை முற்றிலும் மறந்து
ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளானோ?

மற்றவர்களின் வேதனைகள் எமக்குத் தெரிவதில்லை.
நான் உன்னை நியாயம் தீர்க்கிறேன்,
நீ என்னை நியாயம் தீர்க்கிறாய்,
பரஸ்பரம் எமது கூந்தலை, உடையை, தோலை
மேலோட்டமாகப் பார்த்துக் கெள்கின்றோம்.
எம்மை அறியாத உலகை பீதியுடன் பார்க்கின்றோம்
நீ பலத்துச் சிரிக்கிறாய் என நான் நினைக்கின்றேன்
நீ கேட்கும் இசையை நான் வெறுக்கின்றேன்
நான் அதிகமாகப் பேசுவதாக நீ நினைக்கின்றாய்
நான் அணிந்திருக்கும் காலணியை நீ வெறுக்கின்றாய்.

ஆனால் நாம் எப்போதுமே உள்ளே அழுகின்றோம்.
எம்மை அறியாத உலகை பீதியுடன் பார்க்கின்றோம்
யாராவது நாமும் அன்புக்குப் பாத்திரமானவரே
என உணர்வாரா என ஏங்குகின்றோம்.

உணர்ச்சியற்ற இறுகிய முகங்களுடன்
ஒருவரையொருவர் கடந்து செல்கின்றோம்.
உன் துயர்தோய்ந்த அலறல்
எனது துயரை நோக்கிக் கூவுகின்றது
என் இதயமும் உனதுபோல் உருகுகின்றது.

டெனிஷ் மொழியிலிருந்து தமிழில்:
அ.பாலமனோகரன்

(எலிசபெத் கிம் ஒரு போர்க்காலக் கொரியன் தேசத்து அனாதை. இவரை ஒரு அமெரிக்கத் தம்பதிகள் தத்தெடுத்து வளர்க்கின்றனர். பல துயரங்களை அனுபவித்த அவளுக்கு ஆங்கில இலக்கிய கர்த்தாக்கள் ஔடதமாக அமைகின்றனர். அவள் வளர்ந்து அழகிய கவிதைகளை எழுதிப் பெயர் பெறுகின்றாள். அவள் எழுதிய சுயசரிதையில் உள்ள ஆங்கிலக் கவிதை இது.)

நீ உறங்கக்கூடாது!

அந்தவொரு இரவு
ஓர் விசித்திரமான கனவினால் உறக்கம் கலைந்தேன்
ஒரு குரல் என்னோடு பேசியதுபோல் இருந்தது
நிலக்கீழ் நீரலை போல்
மிகத் தொலைவிலிருந்து ஒலித்தது அந்தக்குரல்
படுக்கையிலிருந்து எழுந்த நான்,
‘என்னை என்ன செய்யப்போகிறாய்’
எனக் கேட்டேன்

நீ உறங்கக்கூடாது! நீ உறங்கக்கூடாது!
இதனை வெறும் கனவென எண்ணி விடாதே!
நேற்று என்மீது குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டது
நேற்றிரவு முற்றத்தில் அவர்கள்
தூக்குமேடை அமைத்துவிட்டனர்
நாளை அதிகாலை ஐந்துமணிக்கு
என்னை அழைத்துப் போகவுள்ளனர்.

நிலக்கீழ் பாதாள அறைகள்
நிரம்பிவழிகின்றன
எல்லாக் கோட்டைகளும்
பாதாள அறைகளாலானது
ஊசிக்குளிர் சிறைகளில் நாங்கள்
காத்துக்கிடக்கிறோம்
கனத்த இருளின் குகைகளில் கிடந்து
அழுகிக்கொண்டிருக்கிறோம்

எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை
எதற்காய் இங்கு காக்கவைக்கப்பட்டிருக்கிறோம்
அவர்கள் அழைத்துச் செல்லவுள்ள அடுத்த நபர் யார்
நாங்கள் முனகுகிறோம்
கத்தி ஓலமிடுகிறோம் – உங்களுக்குக் கேட்கிறதா எங்கள் குரல்
உங்களால் முற்றிலும் ஏதுமே செய்ய முடியாதா

எங்களைப் பார்வையிட
எவருக்கும் அனுமதியில்லை
எங்களுக்கு என்ன நேரப்போகின்றதென்பது பற்றி
ஒருவருக்கும் அறிவிக்கப்படப்போவதுமில்லை
இன்னும் உள்ளது
இங்கு நாளாந்தம் என்ன நிகழ்கிறதென்பதை
யாரும் நம்பப்போவதுமில்லை

உண்மையாயிருக்காதென நீ எண்ணுகிறாய்
இத்தனை கொடிய மனிதர்கள் இருப்பார்களா
எனச் சந்தேகிக்கிறாய்
அவர்களுக்குள் நல்ல மனிதர்களே
இருக்கமாட்டார்களா என்றும் நீ கேட்கக்கூடும்
சகோதரா, நீ கற்றுக்கொள்ள வேண்டியவை
இன்னும் நிறையவே உள்ளன!

கனவில் வந்த குரலுக்குரிய மனிதன் சொன்னான்:
உயிரைக் கொடுக்கும் நிர்ப்பந்தம் வந்தால்
அதற்கும் தயாராயிரு
நாங்கள் இப்போ கொடுத்திருக்கிறோம் – விழலுக்கு..விழலுக்கு!
உலகத்தால் நாங்கள் மறக்கப்பட்டவர்கள்
நாங்கள் முதுகில் குத்தப்பட்டுவிட்டோம்!
இனியும் இரவில் நீ உறங்கிக்கிடக்காதே!

கடைகடையாக ஏறி இறங்கித் திரிவதில்
நேரத்தைச் செலவிடாதே
அங்கு இலாப நட்டக் கணக்குகளை
ஆராய்வதில் மூழ்காதே
கடவுளையும் விதியையும்
சொல்லித் தப்ப நினைக்காதே!

உன் வீட்டுக்குள் பாதுகாப்பாய் இருந்தபடி
இது துயர் மிக்கது, அவர்கள் பாவப்பட்டவர்கள்
என்று சொல்லிக்கொண்டு இருந்துவிடாதே

உன்னை எந்தவிதத்திலும் நேரடியாகப் பாதிக்கவில்லை
என்பதற்காய் இந்த அநீதிகளையெல்லாம்
கிஞ்சித்தும் உள்ளார சகியாதே!
என் குரலின் கடைசி மூச்செறிந்து கூவுகிறேன்
பாராமுகமாய் இருப்பதற்கு உன்னை அனுமதிக்கேன்

அவர்கள் அறிந்தே இத்தனையும் செய்கிறார்கள்
அவர்களை மன்னிக்காதே!
வெறுப்பினதும் கொடுந்தீமையினதும் தணலை
அவர்கள் ஊதுகிறார்கள்
கொல்வது அவர்களுக்குப் பிடித்தமானது
எங்கள் புலம்பல்களால் அவர்கள் இன்புறுகிறார்கள்
எங்கள் உலகம் தீப்பிடித்தெரிவதைக் காண விரும்புகிறார்கள்
எங்களை மொத்தமும் குருதிவெள்ளத்தில் மூழ்கடிக்கவே
அவர்கள் விரும்புககிறார்கள்
இது உனக்கு நம்பக் கடினமானதல்லவே – இவை நீ அறியாததல்லவே!

பள்ளி மாணவர்கள் படைவீரர்களாகியிருப்பது நீ அறிந்தது தானே
சாலைகளிலும் சந்தைத் தெருக்களிலும்
பாடியபடி அவர்கள் திரண்டிருக்கின்றனர்
தாய்மார்களின் பொய்மை பூசிய தூண்டுதலின் பேரிலும்
அவர்கள் நாட்டைக்காக்கும் போரில்
குதிக்கவெனத் தயாரிக்கப்படுகின்றனர்

கதாநாயகத்தனம், நம்பிக்கை, கவுரவம்
எனும் போர்வைகளில் அரங்கேறும்
இந்த இழிந்த மானிடத்துரோகத்தை நீயறிவாய்
குழந்தை கதாநாயகனாக இருக்க பிரியப்படும்
கொடியை அசைப்பதும் வாளை விசுக்கி விளையாடுவதும்
குழந்தைகளுக்கு பிடித்தமானதென்பதை நீயறிவாய்
பின்னர் அவர்கள் உருக்குக் கொட்டகைகளுக்கு
அழைத்துச் செல்லப்படுவர்
அங்கு அழுகும்வரை
முட்கம்பிக் குடுவைகளுக்குள் இடப்படுவர்
கிட்லரின் ஆரிய வம்சத்திற்காக
நீ அறிந்திடு! இதுவே மானிடத்தின் பேறும் இலக்குமென்பதை!

எனக்கு இவை புரியவில்லை!
இப்போ காலம் கடந்துவிட்டது!
என்மீதான தீர்ப்பு நியாயமானது
எனக்கான தண்டனை ஏற்புடையது
முன்னேற்றம் நிகழுமென்று நம்பியிருந்தேன்
சமாதானத்தில், உழைப்பில், கூட்டுணர்வில், காதலில்
நம்பிக்கை கொண்டிருந்தேன்
மந்தைகளாகச் சாக விரும்பாதவர்கள்
தனியாக முயலட்டும்
மரணதண்டனை மேடையில்

நான் இருளின் அடர்த்தியில் நின்று குரலெடுக்கிறேன்
உனக்குக் கேட்கிறதா
நீ செய்யக்கூடியது ஒன்றேயொன்றுதான்
சுதந்திரமாகக் கையசைக்கக்கூடிய இந்தப் பொழுதில்
விழித்துக் கொள்ளுங்கள்
உங்கள் குழந்தைகளைக் காத்துக்கொள்ளுங்கள்
ஐரோப்பா எரிகிறது

நான் குளிரில் உறைந்திருந்தேன்
மேலதிக உடைகளை அணிந்துகொண்டேன்
வெளிவானில் நட்சத்திரங்கள் பளிச்சிடுகின்ற காலநிலை
கிழக்கில் ஒற்றைக்கோடு மெல்லக் கனன்றவாறிருந்தது
கனவின் குரல் எதை எச்சரித்ததோ அதே போலவே

பூமியின் விளிம்பில் நாட்கள்
ரத்தக்கடலாகியும் நெருப்புத் தீவாகியும் கிடக்கிறது
பூமியின் விளிம்பில் நாட்கள்
இரத்தக்கடலாகியும் நெருப்புத் தீவாகியும் கிடக்கிறது
பதட்டமும் மூச்சின் திணறலும் மேலெழ
நட்சத்திரங்கள் உறைந்தது போலென்றானது
இப்படித் தோன்றியது எனக்கு:
ஏதோ நடந்துகொண்டிருக்கிறது
எங்களுக்கான காலம் கடந்துவிட்டது – ஐரோப்பா எரிகிறது

(Arnulf Øverland (1889 - 1968) – படைப்புத்துறையில் பன்முகத்தன்மை கொண்ட நோர்வேஜியக் கவிஞர். எழுத்தாளரும், ஓவியரும்கூட. இவரது 20 வரையான கவிதைத் தொகுப்புகள் 1911 – 1965 வரையான 55 ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

முதலாம் உலகப் போருக்குப் பிற்பட்ட ஆண்டுகளில் முதலாளித்துவம், ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தொழிலாளர் உரிமைகளுக்குக் குரல்கொடுப்பவராகத் தனது கவிதைகளையும் ஏனைய படைப்புகளையும் வெளிக்கொணர்ந்தவர். இடதுசாரிச் சிந்தனையாளர்.

மத மற்றும் தேவாலயங்களுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தவர். நாசிசத்தின் அபாயகரமான வளர்ச்சியை முன்னுணர்ந்து எச்சரித்தவர். அதற்கெதிரான கூர்மையான விமர்சனங்களை முன்வைத்தவர். கிட்லரின் நாசிப்படைகள் நோர்வேயை ஆக்கிரமித்த புறநிலையில் அதற்கொதிரான நோர்வேஜிய எதிர்ப்பியக்கத்தின் கூட்டுணர்வை வலுப்படுத்தும் வகையிலான படைப்புகளில் இவரது படைப்புகளுக்கு முக்கிய பங்குண்டு. இவரின் போராட்டப் படைப்புகளுக்காக 1941 – 1945 வரையான நான்கு ஆண்டுகள் ஜேர்மன் படையினரால் சிறைவைக்கப்பட்டிருந்தவர்.

தேர்ந்தெடுத்த நோர்வேஜியக் கவிதைகளை தமிழில் ஒரு தொகுப்பாகக் கொண்டுவரும் முயற்சிக்காக கவிதாவும் முயஎவைாய நானும் நோர்வேஜியக் கவிஞர்களின் கவிதைகளை தமிழாக்கம் செய்துவருகிறோம். Arnulf overland கவிதைகள் பலவற்றையும் இதற்காக மொழிபெயர்த்திருக்கிறோம். 1937இல் அவர் எழுதிய ஒரு நீளமான கவிதையை சில நாட்களுக்கு முன்னர் மொழிபெயர்த்தேன். அதன் உத்தி சற்று வித்தியாசமானது. அதன் பேசுபொருள் நாசிசத்தின் அபாய முன்னகர்வை முன்னுணர்ந்து எச்சரிப்பதாய் அமைந்திருக்கிறது.

இரவு உறக்கத்தில் இருப்பவரை கனவில் ஒரு குரல் எழுப்புகிறது. கனவில் வந்த மனிதனின் குரல் கவிஞருடன் உரையாடுவதான காட்சிப் படிமத்துடன் கவிதை நகர்கிறது. «நீ உறங்கிக் கிடக்காதே» என்று எச்சரிக்கிறது கனவின் குரல்.

கனவின் குரலுக்குரிய மனிதன், நாசிகளின் வதைமுகாமில் இருக்கும் ஒருவர். சிலமணி நேரத்திற்குள் தூக்குமேடைக்கு அனுப்பப்படவுள்ள கைதி. அந்தச் சிலமணி நேர அவகாசத்திற்கிடையில் நாசிசத்தின் அபாயகரமான முன்நகர்வையும் அதன் மானிட விரோத அழிவுகளையும் எடுத்துக்கூறி அநீதிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் சொல்கின்ற குரலாக அந்தக் கனவின் குரல் ஒலிக்கின்றது.

இன்றைய உலகில் நிலவும் அதிகார–இனத்துவேசப் போக்கிற்கும் ஒடுக்குமுறைகளுக்கு முகம்கொடுக்கும் மானிட சமூகத்தின் நிலைக்கும் பொருந்தக்கூடிய ஒரு கவிதையாக இதனைப் பார்க்கமுடிகிறது.)

மூலம்: Arnulf overland.

தமிழில்: ஷரூபன் சிவராஜா

நேற்று மலர்ந்த லைலாக் பூக்கள்....

நேற்று மலர்ந்த
லைலாக் பூக்கள் எங்கே என்று
நீங்கள் என்னைக் கேட்கக் கூடும்.
விவரமாகச் சொல்வேன்
விலாவாரியாக உங்களுக்கு
எல்லா விவரமும் நான் சொல்வேன்.
'மாட்ரிட்' நகரின் மருங்கிலே
நான் வாழ்ந்திருந்தேன்
ஆலயங்களின் மணியோசை
அவ்வப்போது கேட்கும்
மணிக்கூண்டுகளின் ஓசையும்
மிதந்து வரும் காற்றிலே
மரங்களும் கொடிகளும்கூட
இளங்காற்றில் ஆடி அசைந்து
ஒலி எழுப்பும்.
பூஞ்சோலை என்றுதான்
பெயரிட்டிருந்தோம் என் வீட்டிற்கு
மூலை முடுக்கிலெல்லாம்
ஜெரேனியம் பூக்கள் பூத்திருந்தன.
ராவுல் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?
ஏய் ரபேல் பெட்ரிக்கோ
ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு?
ஆனி மாதமொன்றில்
ஆதவனின் கிரணங்களினால்
அழகுபடுத்தப்பட்ட பூக்கள்
சகோதரரே என்னினிய சகோதரரே
ஞாபகமிருக்கிறதா உங்களுக்கு.
நகரின் எல்லா இடங்களிலும்
கடைகள் காய்கறிமண்டிகள் ஓட்டல்கள்
சாராயக் கடைகளெல்லாம்
கலகலத்துக் கொண்டிருந்தன.
வீதிகளெல்லாம் காலடியோசை
கடலிலிருந்து கொண்டு வந்து
கொட்டப்பட்டிருந்த மீன்கள்
கூவிக்கூவி விற்பனையானது
கடலை எட்டிப் பிடிக்க முயல்வதுபோலத்
தக்காளித் தோட்டங்கள்.
ஒருவிடிகாலைப் பொழுதில்

தீப்பற்றி எரிந்தன இவையெல்லாம்
ஒரு விடிகாலைப் பொழுதில்
பூமியினின்றும் பொங்கி எழுந்த
அக்கினித் திவாலைகளில்
தீய்ந்து தீய்ந்து மனிதர்கள் வீழ்ந்தனர்.
அந்தப் பொழுதிலிருந்து
எங்கெங்கு நோக்கினும் அக்கினிச்சுவாலை
அந்தப் பொழுதிலிருந்து
நகரின் எல்லாப் பக்கமும்
துப்பாக்கிச்சத்தம்
அந்தப் பொழுதிலிருந்து
நகரைச் சூழ்ந்தது குருதிவெள்ளம்.
கொலைகாரக் கும்பலொன்று
விண்வெளியே வந்து
வீசிய வெடிகுண்டுகளால்
வீதிகளெல்லாம் ஒன்றுமறியாத தளிர்களின்
இரத்தத்தாலன்றோ நிறைந்து வழிந்தது
ஏதுமறியா ஸ்பானியர்களின் செங்குருதி
பீறிட்டெழும் நீஷரூற்றைப் போல
ஆகாயத்தை நோக்கி
பீச்சி அடிக்கப்படுவதை நான் பார்த்தேன்
கொலைகாரச் சேனாதிபதிகளே
என் பிணவீட்டைப் பாருங்கள்
சுக்குநூறாகிப்போன
என் ஸ்பெயினைப் பாருங்கள்.
கனவுலகத்திற்கு இட்டுச்செல்லும்
காதலைப் பற்றியும்
பூக்கள் நிறைந்த மஞ்சத்தைப் பற்றியும்
பாடல்கள் ஏன் அவன்
புனைவதில்லையென்று நீங்கள்
கேட்கக் கூடும்.
தோழர்களே வாருங்கள்
வந்து பாருங்கள்
குருதிக் காடாயிருக்கும்
வீதிகளை வந்து பாருங்கள்
வாருங்கள் வந்து பாருங்கள்
குருதிக் குளங்களாகி இருக்கும் வீதிகளை.

மூலம் - பாப்லோ நெருதா

சிங்களத்திலிருந்து தமிழில் - பேனா மனோகரன்

பாலை

ஒருதடவை நினைத்தேன்
தந்தைக்கும் தாய்க்கும்,
கணவனுக்கும் சோதரிக்கும்
உரிமையானவள் நான் என்று.
பின்னர் நினைத்தேன் நான்,
எனது காதலனுக்கென்று.
வளர்ந்தபிறகு
நிச்சயமாய் அறிந்தேன்
என் வாசகருக்கு மட்டுமே,
வேண்டப்படுவதாய்.
இன்று எல்லாம் இழக்கப்பட்டுவிட்டது
யாருக்காகிலும் முழுமையாய்
நான் வேண்டப்படுவது சந்தேகம்.
இக் கடதாசி வெண்ணிறப் பாலை
எனது அழுகையும் ஒலிகளற்றது.
இங்கு யாருமே என்னோடு இல்லை
நான்
'கமலா'வென அவர்கள்
முன்பு,
அழைத்த ஒருத்தி.

கமலாதாஸ்
தமிழில் : அ.ஜேசுராசா
'அலை' (வைகாசி 1990)

கூட சங்வூ கவிதைகள்

நுரைபனி நிலாவின் பாடல்
பார்க்கிறேன் நுரைபனி
நிலத்தினின்று
எழுந்திடும் நிலாவை
திடீரென்று
நினைக்கிறேன்
கோணமளந்திடும்
கருவியுண்டா,
அதைக்கொண்டு நான்
என் தாய்நாட்டு
நிலாவினை
அளந்திடுவேன்
இங்கு நான் பார்த்திடும்
இந்த நிலாவைவிட
அது இன்னும்
வட்டமானதா?
ஒரு வெப்பமானியுண்டா,
அதைக்கொண்டு நான்
இங்கு என்முன் இருக்கும்
நுரைபனியை அளந்திடுவேன்
என் தாய்நாட்டின்
நுரைபனியைவிட இது
இன்னும்
குளிர்ச்சியானதா?
நான் என்னை
நினைத்துச் சிரிக்கிறேன்
இவ்வகையான
பற்றுகள் தான் எனக்கு
சீனச்செவ்வியல்களிலிருந்து
கிடைக்கிறது

நான் ஒத்துக்கொள்ளத்தான்
வேண்டும் நான்
சார்ந்தேயிருந்திடும்
வெறும் நேர்வேம்பு
தான்
நிலத்தில் வாழாமல்
பத்து மைல்
தாமரைக்குளம் என்
கனவில் அடிக்கடி
எத்தனை
தாமரையிலைகள்
மீதமிருக்கின்றன?
எத்தனை
மழைத்துளிகளை நான்
கேட்கிறேன்?
ஆக, நிலாவைப்
பார்த்திடும்போது
நான் பூரிக்கிறேன்
நுரைபனியைப்பார்த்
திடும் போது நான்
குதூகலிக்கிறேன்
அவற்றைப்
பார்த்துச்சலித்திடும் போது
நான் உறங்கச்செல்கிறேன்

சீனமொழி:கூ சங்வூ (ஹாங்காங்)

ஆங்கிலம்:Martha Cheung

தமிழ்:ஜெயந்தி சங்கர்(சிங்கப்பூர்)





நூல் அறிமுகம்

பூவுலகைக் கற்றலும் கேட்டலும்

இலங்கையின் திருகோணமலையை சேர்ந்த மதுபாஷினி ஒரு கவிதாயினி மட்டுமன்றி ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளரும் கூட. இவர் ஆழியாள் எனும் பெயரில் தனது கவிதைப் படைப்புகளை உரத்துப் பேச, துவிதம்,கருநாவு போன்ற கவிதைத் தொகுப்புகளாக வெளியிட்டிருக்கும் அதே வேளை பிற மொழிக் கவிதைகளிலும் ஆர்வம் கொண்டவர். இவரது படைப்புகளும் ஆங்கிலம், மலையாளம், கன்னடம், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இவரது மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பொன்று 2017 நவம்பர் மாதம் புதுச்சேரி அணங்கு பெண்ணியப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இது அணங்கு பதிப்பகத்தின் எட்டாவது பதிப்பாகும்.இந்நூலின் அட்டை வடிவமைப்பை நரேந்திரன் என்பவர் அருமையாக செய்திருக்க ஒரு நேர்த்தியான மொழிபெயர்ப்பு நூலாக அவுஸ்ரேலிய ஆதிக்குடிகளின் கவிதைகள் நூல் உருப் பெற்றுள்ளது.

இத் தொகுப்பில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் 36 கவிதைகளும் 29 அவுஸ்ரேலிய ஆதிக்குடிக் கவிஞர்களினால் நேரடியாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.ஆழியாளின் ஆசையால், விடாமுயற்சியால் இன்று தமிழுருப் பெற்று நம் கைகளில் தவழும் இந்நூல் அவுஸ்ரேலிய ஆதிக்குடிகளின் எண்ண ஓட்டத்தையும் வாழ்க்கை முறையையும் தத்ஷரூபமாக படம் பிடித்துக் காட்டுகிறது.

பிற மொழிக்கவிதைகளையும் வாசிப்பதால் நம் எண்ணங்கள் கற்பனைகள் இனம் மொழி கடந்த பரந்த சிந்தனையை தரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவ்வாறான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திய ஆழியாள் என்கிற மதுபாஷினிக்கு நன்றிகளும் பாராட்டுகளும் கூறி அவரின் இம் மொழி பெயர்ப்புப் பணி மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நிலாந்தி சசிகுமார்
மட்டக்களப்பு

குளிர்காலக் குருவி

குளிர்காலக் குருவி ஒன்று
கதவின் காகிதத் திரையை கொத்திக்கொண்டிருந்த
அது பசியோடு இருக்கிறது.
அக்குருவியின் அலகு இட்ட துளையின் வழியே
வெள்ளமாய் முண்டியடித்த பனிக்காற்று .
ரோசாக் கன்னக் கன்னித்துறவி அவளின் அகவை நாற்பது
குளிரில் நடுங்கி இறுகிப் பின்னிக்கொண்டுள்ளன அவரின் புருவங்கள்
ஓர்முறை தணிந்த அவர்தம் சூத்திர – மந்திரக்குரலோ
ஏற்றத்தோடும் தாளத்தோடும் எழுச்சியுறுகின்றது மீண்டும்.
அமைதியாக வீழும் வெண்பனி
பைன்மரக் கிளைகளின் நித்தியப் பசுமை
மெல்ல மெல்ல தமதிருப்பைப் பரப்புகின்றன.
மீண்டும் அக்கதவைக் கொத்துகின்றது அக்குருவி.
மலையின் உள்ளாழத்தில் உள்ள ஆலயத்தில்
பனியால் தடைபட்ட உணவூட்டுதல்
பசியோடிருக்கிறது அந்தப் பனிக்குருவி .

திறனாய்வு: இயற்கையின் அசைவுகள் ஒவ்வொன்றும் உயிரினங்களைப் பக்குவப்படுத்தும் பாடங்களின் அங்கங்களாகவே உள்ளன என்பதை அழகாக உணர்த்தும் அற்புதமான புனைவு இது. பொறுமை எனும் சிகரம் ஏறி பசியெனும் பிணியை வெல்லும் சிறு பறவையின் வாயிலாக கவிஞர் கிம் யாங் ஷிக் பெரும் தத்துவத்தை உணரச் செய்துள்ளமை கலீல் கிப்ரானின் கீழ்கண்ட ஆழ்ந்த தத்துவங்களை உணரச்செய்வதாக உள்ளது. நம் வாழ்க்கையில் தொடர்ந்த பல்வேறு மாற்றங்களால் நாம் ஒவ்வொரு முறையும் உருவாகியும், வளர்ந்தும் வருகிறோம். வீழ்ச்சி கூட வாழ்க்கையின் ஒரு இயல்பான பகுதியாகவே உள்ளது . இலையுதிர்ந்து வெற்றுக்கூடாக நிற்கும் மரங்கள் அழகாக இருப்பதில்லை. ஆனாலும் அது அப்படியே நிலைத்து நின்று விடுவதுமில்லை. காலம் மாறுகிறது. மீண்டும் மொட்டை மரமும் துளிர் விடத்தான் செய்கின்றது. நம் தோல்விகளாலும், பலவீனத்தாலும் நம்மை ஒருவர் அளந்துவிட முடியாது என்பதையே இது நினைவூட்டுகிறது. "வசந்த காலத்தில் பூத்துக் குலுங்கும் மரங்கள் கோடைகாலத்தில் கனிகளைத் தாங்கி நிற்கும்போழ்தும் எவருடைய பாராட்டையும் நாடுவதில்லை இலையுதிர்காலத்தில் தங்கள் இலைகளை உதிர்க்கும்போழ்தும், குளிர்காலத்தில் நிர்வாணமாக நிற்கின்றபோதிலும் எந்த பழி பாவத்திற்கும் அஞ்சுவதில்லை. பாராட்டினால் பரவசப்படவும், நிந்தனையால் இழிவுபடுதலும் இன்றி இயல்பாய் இருக்க என் ஆத்மா எனக்கு கற்பித்துள்ளது. ஒவ்வொரு குளிரின் இதயத்திலும் நடுங்கித் தவிக்கும் வசந்தம் ஒன்று இருக்கின்றது, ஒவ்வொரு இரவின் திரைக்குப் பின்னும் பிரகாசிக்கும் ஓர் விடியலும் உள்ளது. பனிக்கட்டியின் அடியில் உள்ள விதைகளின் கனவுகள் போன்றதே வசந்தகாலத்தின் உன் இதயக் கனவுகளும்"

மூலப்பனுவல் : கொரிய மொழியில் – கிம் யாங் ஷிக்
ஆங்கில மொழிபெயர்ப்பு – கிம் யாங் ஷிக் – A WINTER SPARROW
தமிழில்: பவள சங்கரி

மகிழ்ச்சியாளனின் மரணயங்கம்

நிரந்தர மகிழ்ச்சியால் நான் பாதிக்கப்படுகிறேன்
இந்த மகிழ்ச்சி என் சுடுகாடுவரை செல்லும்
நான் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்றறிக
கடவுள்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடப்பட்டவன்
தேவதைகளால் நெற்றியில் முத்தமிடப்பட்டவன்.

என் மகிழ்ச்சியின் மிதப்பில்
என தலையை நிமிர்த்துகின்றேன்
அவலங்களைப் பார்க்கின்றேன்
குண்டுச் சிதறல்களால் வதைக்கப்பட்ட உயிர்களங்கே

சிரியா வாழ்வின் மனச்சாட்சியைக் குதறுவது
மனிதாபிமானத்தால் அல்ல
மானிடத்தின் தயவிற்கு இழப்பின்றி
யேமன் அழிவில் சரிகின்றது
சூடான், பர்மா, லிபியா, கொங்கோ எங்கணும்
இருளும் அறத்தின் அழிவும்
எம் வாரிசுகளின் முதிசமாகின்றது

என் நோய் தொடர்கின்றது
என் உவகையும் அவ்வாறே

சிரியக் கவிதை:

Chris icarus

தமிழில் – வேல் தர்மா

வாசித்ததும் நேசித்ததும்...

1. ஒரு சிறிய மரம்
அதிலொரு பெரிய வனம்
அதுதான் என் மனம்.

2. நானொரு வாடகை வீடு
யாருடைய யார் இதில் வசிப்பது?

3. ஜனிக்கும் நிமிஷத்திலிருந்தே
என்மகன் இங்கிலீஷ் படிக்கணும்
இதனால் மனைவியின் பிரசவத்திற்கு
இங்கிலாந்திலே ஏற்பாடு செய்தேன்
நான்.

மலையாள மகாகவி குஞ்ஞூண்ணி
தமிழில் : பேரா.பா.ஆனந்தகுமார்.
பகிர்பவர்– பேனா மனோகரன்,
மதுரை.

நான் அவனைப் பார்த்துக்கொண்டிருக்க..
அவன் வெளியே பார்த்துக்கொண்டிருந்தான்...
நகரும் உலகத்தை.
பண்டைய நீர்த் தாரைகள்..சாரல்களின்
மிச்சமாய்
சிறு குன்றுபோல் தென்படுகின்றான்
என்னை முளைவித்துக் கொண்டிருக்கும்
விதைப்பூமியாகி
மறுகணம் மாயமாகிவிட்ட சிறுவனே
நீ அநாதையென்றால்
இத் தேசம் அநாதை
நீ வறியவன் என்றால்
இத் தேசமும் வறியது.
அடேய் அப்பனே
என் காகிதங்கள் மீது நடந்து செல்வாயா?
உன் சமுத்திரங்களை என் பாடல்களாய்
கோத்தபடி..
இதயமெங்கும் எதிரொலிக்கும்
சிறிகாகுளம் கானங்களே
உன்காலடிகள்
என்னை சமுத்திரமாக்கி
என்னை பூமியாக்கி
என்னைப் பெரும் காடாக்கி..
மறைந்துவிட்ட சிறுவனே
நீ என் எழுத்தாகி
என் எழுத்தாகி..

கே.சிவாரெட்டி
தமிழில்: சாந்தாதத்
நன்றி: 'மோகனா ஓ மோகனா' (தொகுப்பு)

கே.சிவாரெட்டி அவர்கள் தெலுங்குப்படைப்புலகில் பிரபல்யமானவர். இதுவரை இருபது நூல்களைப் படைத்துள்ளார். இவரின் 'மோகனா ஓ மோகனா' எனும் கவிதை நூல் சாகித்திய அக்கடமி விருதைப்பெற்றமை குறிப்பிடத்தது.இந் நூல் சாகித்திய அக்கடமிக்காக தமிழில் சாந்தாதத் அவர்களின் மொழிபெயர்ப்பில் வெளிவந்துள்ளது

பசுமையாய் மாற்றுவோம்

உயிர்கள் அழுகிறது எதனாலே ?
சுத்தம் இல்லை அதனாலே ?
பூமி அழிகிறது எதனாலே ?
பசுமை இழப்பது அதனாலே

பூமி என்பதுநம் அன்னை அல்லவா
அதை மாசுபடுத்துதல் கொடுமை அல்லவா
உண்ணும் உணவும் இருக்கும் இடமும்
அவள் நமக்கு கொடுத்தது அல்லவா
அவளை நித்தம் வணங்கவேண்டியது கடமையல்லவா

உலக வெம்மை கேடு அல்லவா
இது கைமீறும் முன்னே காத்துநில்லடா
இறக்கும் மரமும் மிருகமும் கொடுமையல்லவா
நாளைய உலகை பசுமையாய் மாற்ற வேண்டியதே நல் ஆக்கம்
அல்லவா

நித்தம் உருகும் உறை பனியால்
உலகம் ஒரு நாள் முங்கும்
இதை தடுக்க வேண்டிய முயற்சிகள்
என்னவென்று நாம் என்ன வேண்டும்

விலைஉயர்ந்தது மரங்களை பாதுகாக்க வேண்டும்
பொக்கிஷமான நீர்நிலையங்களை
சேமிக்க வேண்டும்

மரங்களை வளர்ப்போம் அன்னைபூமியை
பசுமையாய் மாற்றுவோம்
மாசை குறைப்போம் அன்னைபூமியை
மகாராணியாக மாற்றுவோம்

Mrs. Avani Desai (Make It Green - June 2014)

தமிழில்: - ஜீவா நாராயணன்

சலாம்

சலாம் ,
அனைவருக்கும் சலாம்
கரம் பற்றியவர்களுக்கு
ஆயுதத்தை சுழற்றுகிறவர்களுக்கு , சலாம்
காலணியோசையின் அச்சத்தில்
என் பின்புறம் முடங்கிற்று இடது கரம்
வலது கரத்தில் சலாம்
என்னை உற்றுப் பார்க்கிறவர்களுக்கு , சலாம்
என்னை கவனிக்காதவர்களுக்கும்
என்மீது அக்கறைப்படாதவர்களுக்கும் , சலாம்
என்னைக் கிரயமாக்குகிறவர்களுக்கு, சலாம்
என்னை விலைபேசும் முதலாளிக்கு , சலாம்
சலாம் , நண்பர்களே
ஒவ்வொருவருக்கும் சலாம்
அது ஒரு நீண்ட கவிதை .. இப்பொழுது முடிவுற்றது
உங்கள் ஒவ்வொருவருக்கும்
பெருமதிப்புமிகு சலாம்
எனக்குப் பல புயங்களும் , கரங்களுமிருக்குமானால்
புனிதமான வழிபாட்டுத்தளம் போல்
ஒவ்வொருவரையும் வணங்கியிருப்பேன்
மன்னியுங்கள் , நான் சாவுக்கேதுவானவன்
எனக்கு இருகரங்களே உண்டு
இடது ... என் பின்புறமிருக்கும்
வலது கரத்தால் உங்களுக்கு
எளிய ஒருகை சலாம் ,

ஆங்கிலம் : மங்கேஷ் பட்கோ வங்கர்
தமிழில் : சந்திரா மனோகரன்

பாதை மாறிய மனிதன்

உன்னிடமிருந்து,
தொலைவிலுள்ள
பனி மூடிய மலையொன்றில்
பாதை மாறிய மனிதனாக,
நான் விட்டுச்சென்ற என் காற் தடங்களைத்
தொடர்ந்து தேடியபடி
நடந்துகொண்டிருக்கின்றேன்.

நகர்ப்புற வீதிகளில்
சன நெரிசலில் சிக்கிய மனிதனைப்போல்
ஒரு சோகமான மறதி
வாழ்க்கை முழுவதும்
சிதறிக்கிடக்கிறது.

காதல்!
நீ சொன்ன அந்த வார்த்தை,
நீ உன் சட்டையில் குத்தும்
சிவப்பு ரோசா ஊசியைப் போல,
சிறிய ஊசி கொண்டு
என் வாழ்வில்
தொங்கிக்கொண்டிருக்கிறது.

நீ என்னிற் பலமுறை கடந்திருந்த
என் முகவரியை உன்னிடம்
நான் கேட்கவேண்டும்.

நாளும் நான் ஓர் இலகுவான
பேரானந்தப் புன்னகையைச் சிந்துவதற்காக
என்னில் நீ
செடிகளை நாட்டுகின்றாய்.

ஒவ்வொரு முறையும்
நீ உன் கைகளை நீட்டும் போதும்
அங்கே முடிவடையும் வீதியொன்று
புதிதாகத் திறந்து கொள்கிறது.

புயலில் சிக்கிய பெரிய கப்பலொன்று
தொலைத்த தன் பயணிகளைக்
கரைசேர்க்க விளைவதைப்போல,
ஒவ்வொரு தடவையும்
உன் முக்காட்டில்
நீ உனக்கும் வாழ்க்கைக்குமாக
முடிச்சுக்கள் போடும்போதெல்லாம்,
உன் கண்களில் அடைக்கலம் தேடுகிறேன்.

முத்துக்குளிப்பவர்களுக்குத் தெரிவதில்லை,
உன் ஒரு கூந்தலின் முடி கொண்டு
எல்லா முத்துக்களையும் கோர்த்து
ஓர் அழகான காதலனுக்குப்
பரிசளிக்க முடியுமென்று!

மூலம்– செர்பியா Alireza Abbasi (அலீராசா அபாசி)
யேர்மன் மொழியிலிருந்து தமிழுக்கு – சுகிர்தா சண்முகநாதன்

மராட்டியத் திரைப்படப் பாடல்

விண்ணில் ஓர் எதிரொலி
எழில்கூடிய மெல்லிசை
இன்று .....
அழகு ததும்பும் மாறுபட்ட நாள்
ஆன்மாவில் மெல்ல நுழைகிறாள் அவள்
இளங்காதல் முகம் சிவக்கிறது
முரசொலிபோல் இதயம் படபடக்கிறது
உன் கரம் என்னோடு பிணைக்கிறது
எங்கும் பரவும் மூர்க்கத்தனம்
இதயம் பொங்குகிறது
எங்கெங்கும் பரவும் ஆவேசம்
இதயம் கட்டுக்கடங்காமல் தவிக்கிறது
யாவும் மாறிப்போயிற்று
இவைதான் காதலின் காற்றிசை !
அது .... கபடற்ற , அச்சமுற்ற
எழிலார்ந்த இளம் பறவையைப் போன்றது
அப்படியென்னதான் இதயத்துள் பதுங்கியவை
அதரங்களில் வழிகின்றனவோ ....
ஆக, நம் கரங்கள் நெருங்கி வர
உன் கரம் என் கரத்தோடு இணைகிறது
இளந்தளிர்களுக்குள்
வைகறை ஆதவனின் ஒளி பரவல்
வளரிளமையில் உள்ளம் ததும்பும் காதல்
இதயத்துள் பூத்துக் குலுங்கும் உன் பாடல்
என்றென்றும் எதிரொலிக்கிறது
நற்குறிநேரங்களில் நீ இசைக்கும் பண்ணிசை
என்னைக் கவ்விக் கொள்கிறது
கதிரொளி , காற்று , வானம் , விண்மீன்கள்
யாவுமே யவனமாய் .
என் நேசத்துக்குரிய இளவரசியே ,

என் இதயம் மஞ்சள்நிற ஆரஞ்சுபோலாகிறது
நம் வாழ்வின் துயர நாட்கள் கடந்தாயிற்று
அந்த ஒரே ஒரு பார்வையில் ...
காதலின் நஞ்சு என் மேனிப்பூராப் பரவுகிறது
விண்ணில் தோன்றும் இடிமுழக்கங்கள்
இசையுடன் இறங்கும் அற்புதம்
நினைவில் அகப்படாதது நிகழ்கிறது
ஒரு கனவுபோல ...
பூமாலை நெளியும் உன் கழுத்து வனப்புடையது
நம் உறவு ஏழு தலைமுறை வரை
என்கிறது என் இதயம்
கடவுளைப்போல் உன்னைப் போற்றுகிறேன்
அடியாழத்தில் விதைக்கப்படுகிறது
காதலெனும் விதை
இதயம் காதலினால் ஈரலிக்கிறது
காதலும் மகிழ்வுமற்ற துன்பநாட்கள்
இனியில்லை
உன் அன்பு யாவற்றையும் கிரகித்து
திரும்பவும் கொடுத்து விட்டது
பளிச்சிடும் மின்னலும் , மழைப்பொழிவும் ,,,
எல்லையற்ற ஆகாயம் திறந்து கிடக்கிறது
பேரின்ப வாசல் அது
எங்கும் பரவும் மூர்க்கத்தனம்
இதயம் வெறியாட்டம் போடுகிறது
எங்கெங்கும் பரவும் ஆவேசம்
இதயம் கட்டுக்கடங்காமல் தவிக்கிறது .

ஆங்கில வழி தமிழில் : சந்திரா மனோகரன்

எரித்துக்கொண்டிருக்கும் போர்

இந்தப் பச்சை இரவு
மணல் பற்றிய கனவுகளையும்,
வெம்மையான வெளிச்சத்தின் கீழே கிடக்கும்
பாலைவனத்தையும்
எரித்துக்கொண்டிருக்கிறது!

நட்சத்திரங்களின் பிரகாசம் போல,
பச்சையாக அசையாமல் நிற்கும்
தென்னைமரங்களுக்கு மேலாக
குண்டுகள் வெடித்துச்சிதறுகின்றன.

இந்தப் போர்
தனது பொஸ்பரசு மருந்தையும்,
இரத்தங்களையும்,
சதைகளையும்,
இந்த வாழ்க்கையையும்
எரித்துக்கொண்டிருக்ன்கிறது!

கானல்நீரின்
திரவப் பளிங்குக் கண்ணாடியினுள்
மிகையாகக் கக்கும்
பச்சை நிற
மெல்லிய நெருப்பின்
வாயுக்குமிழிகள்
மின்னலடிக்கின்றன.

பழைய பாபிலோனின் கதையே!
செகர்சதாவின் தந்திரம் மிக்க
வார்த்தைத் தோட்டமே!
திரும்பி வந்துவிடு!
சொல்லின் இதயத்தில்
எந்த ஒளியுமே இல்லை.
எல்லாவற்றையும் இந்தப் போர்
தின்டுமுடித்துவிட்டது!
பச்சை இரவே!

Narcís Comadira

மூலம்- கதலானியமொழி

ஜெர்மன் மொழியிலிருந்து தமிழுக்கு - சுகிர்தா சண்முகநாதன்

(செகர்சதா- 1001 இரவுகள் – கதையில் வரும் பெண்ணின் பெயர்.)

அச்சமூட்டும் கனவொன்று

நான் கனவு
காண்கிறேன்
நான் எதைக் கனவு
காண்கிறேன் என்று
கேட்கிறீர்களா ?
நான் பாட்டொன்று
பாடுவதாய்க் கனவு
காண்கிறேன்..
எதைப்பற்றியா ?
ஒருநாள் எங்களிடம்
ஒரு நிலம் இருந்தது..
ஒருநாள் எங்களிடம்
அச்சமூட்டாத,
அதிரவைக்காத
உரத்த குரலொன்றும்,
வனப்பான
மொழியொன்றும்
இருந்தது.
இப்போது
எதுவுமில்லை...
நாங்கள் தொலைத்த
குரலைக் கொண்டு
நாங்கள் தொலைத்த
மொழியினிலே
நாங்கள் தொலைத்த
நிலத்தைப் பற்றிப்
பாடுகிறேன்.

பொஸ்னியக் கவிஞர் அப்துலா சைத்ரன்
தமிழ்ப்படுத்தலும் செவ்வையாக்கமும் செ மதுரகன் \ வவுனியா

காற்றில் பறக்கும் விடைகள்

ஒருவனை நீங்கள்
ஒரு மனிதன் என்று அழைப்பதற்கு முன்னால்
அவன் எத்தனை சாலைகளில் இறங்கி நடக்க வேண்டும்?
ஒரு வெண்புறா
மணல் மீது உறங்குவதற்கு முன்னால்
அது எத்தனை கடல்களைக் கடந்து தீர வேண்டும்?
ஆம் பீரங்கிகள் இறுதியாக தடை செய்யப்படுவதற்கு முன்னால்
குண்டுகள் எத்தனை முறை பறக்க வேண்டும்?
இவற்றுக்கான விடை
என் நண்பனே
காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.
விடை காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.
கடலில் அடித்துச் செல்லப்படுவதற்கு முன்னால்
ஒரு மலை எத்தனை ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும்?
ஆம்,
மக்கள் சுதந்திரமானவர்களாக அனுமதிக்கப்படுவதற்கு முன்னால்
சில மக்கள் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும்?
ஆம்
பார்க்கவில்லை என்பதாக பாசாங்கு பண்ணிக் கொண்டு
எத்தனை முறை ஒரு மனிதன் தன் தலையைத் திருப்ப முடியும்?
இவற்றுக்கான விடை
என் நண்பனே
காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.
விடை காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.
ஆம்
ஒரு மனிதன் வானத்தைப் பார்க்க முடிவதின் முன்னால்
எத்தனை முறை மேலே பார்க்க வேண்டும்?
ஆம்
மக்களின் அழுகுரலை ஒரு மனிதன் செவியுறுவதின் முன்னால்
ஒரு மனிதனுக்கு எத்தனை செவிகள் இருக்க வேண்டும்?
ஏராளமான மக்கள் செத்து விட்டார்கள் என்று
தெரிந்து கொள்வதற்கு முன்னால்
எத்தனை சாவுகள் விழவேண்டும்?
இவற்றுக்கான விடை
என் நண்பனே
காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.
விடை காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது.

பாப் டைலன்
தமிழில் : இந்திரன்

பூமராங் இனி தேவையில்லை

பூமராங் இனி தேவையில்லை
ஈட்டிகட்கும் இனி வேலையில்லை
நகர விடுதிகளில் மதுவருந்தும்
நாகரிக மாந்தரானோம் நாம்..

பாரம்பரிய நடனங்கள் மறந்தோம்
பன்னெடுங் கொண்டாட்டம் இழந்தோம்
கைப்பணம் கொடுத்துத் திரையரங்கினில்
கேளிக்கைப் படங்கள் ரசிக்கின்றோம்.

வேட்டையாடிக் கொண்டுவந்து
கூட்டத்தோடு பங்கிட்டுண்ணும்
பண்டையப் பழக்கம் துறந்தோம்
ஓடாய்த் தேய்ந்து உழைத்த காசில்
கடையில் வாங்கி கண்டதை உண்கிறோம்

வாழ்ந்திருந்த வகைகள் மறந்து
வாழ்விக்கும் முதலாளிகளைத்
தேடித் தேடி சோர்கிறோம்.
வாலிபத்தில் வாழ்க்கையறிய
தேசாந்திரம் போனோம் அன்று.
பேருந்து ரயிலேறி அசலூர் வந்து
வேலை தேடி அலைகிறோம் இன்று.

ஆடையற்றிருந்த காலத்தில்
அவமானம் குறித்து அறியாதிருந்தோம்
அப்பழுக்கில்லா நிர்வாணம் மறைக்க
ஆடைகள் அணிந்து அழுக்காகிறோம் இன்று

குச்சுக்குடிசைகள் இனி தேவையில்லை.
குடியிருக்க அடுக்குமாடி இருக்கையிலே.
அசலும் வட்டியும் கட்டிமுடிக்க
ஆண்டிருபது ஆகலாம், அதனாலென்ன?



கற்கோடரியைக் கைவிட்டு
இரும்புக்கோடரியைக் கையிலெடு...
அடிமை போல உழைத்துழைத்து
ஆண்டானுக்கு உணவு கொடு.

வெள்ளை மக்கள் நக்கல் செய்யும்
கொள்ளிக்கோல்கள் இனியும் வேண்டாம்.
இதோ.. வந்துவிட்டது மின்சாரம்
இல்லை அதிலும் நன்மையேதும்.

தொலைந்துபோன தொன்மப்பிசாசு
புனியாப் என்னும் நீர்வாழ் கொடூரம்
வெள்ளைமனிதனாய் மீண்டுவந்து
வேறுபெயர் சொல்லிக்கொள்கிறது.

நவீனத்துவ ஓவியங்கள் யாவும்
நச்சென்று சொல்லும் பொருள் யாது?
எங்கள் குகையோவியங்கள் காட்டும்
கருத்துக்கெதுவும் ஈடாகாது.

கறுப்புமனிதனுக்கு மிருக வேட்டை,
வெள்ளைமனிதனுக்கு பண வேட்டை.

தகவற்கட்டைகள் இனி தேவையில்லை
தூது செல்வோர்க்கினி வேலையில்லை..
தொலைக்காட்சிகள் இல்லா வீடில்லை..
தொடர் விளம்பரங்களுக்கு முடிவில்லை.

குத்தீட்டிகள் இனி வேண்டாம்
குண்டுக்கழியும் இனி வேண்டாம்
அணுகுண்டு கைக்கொண்டோம்..
அகிலத்தை அழித்திடுவோம்.

ஆசிரியர் – ஒட்ஜெஷரூ நூநுக்கல் (Oodgeroo Noonuccal) (1920 – 1993)
(ஆஸ்திரேலியாவில் வெள்ளையர்கள் வரவால் பூ ர்வகுடி மக்களின் வாழ்க்கைமுறையில் ஏற்பட்ட இழப்புகள் குறித்த ஆதங்கக்கவிதை)
தமிழாக்கம் – கீதா மதிவாணன்

விதியின் கை

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தையேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?

உமர்கய்யாமால் எழுதப்பட்ட இக்கவிதை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையால் பெர்சிய மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.
விதி மிகவும் வலிமையானது. விதியை மதியால் வெல்லலாம் என்று நமக்கு நாமே நம்பிக்கை கொடுத்துக் கொண்டாலும், நமக்கு விதிக்கப்பட்ட விதியை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். ஏதோ ஒருவகையில் நாம் அதனை மாற்ற நினைத்தாலும் அதில் ஓர் எழுத்தைக் கூட நம்மால் மாற்றி எழுதமுடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லும் கவிதை.

முனைவர்.ச. பர்வத கிருஷ்ணம்மாள்
திருநெல்வேலி.

நெய்தல்

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்-2018